17.02.2009

**இல.கணேசன்**
**மாநில தலைவர்**

**பத்திரிகை செய்தி**
------------------------------

சிதம்பரம் ஆலயத்தை அரசு எடுத்துக் கொண்டதை எதிர்த்து ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டுள்ளது. அந்த வழக்கில் தன்னையும் இணைத்துக்கொள்ள திரு.சுப்பிரமணியம் சுவாமி நீதிமன்றம் வந்த போது நீதிமன்றத்துக்குள்ளேயே நீதிபதிகள் முன்பாகவே அவர் தாக்கப்பட்டதாகவும், அவர் மீது சிலர் முட்டைகளை எறிந்ததாகவும், அவதூறாக வசை பாடியதாகவும் அறிந்தேன். அவர்கள் தாக்க முனைந்த நோக்கத்துக்கும், அவர் வழக்கு தொடர்ந்த நோக்கத்துக்கும் சம்பந்தம் இல்லை. ஆனால் சுவாமி வருகையை முன்னதாகவே அறிந்து சிலர் திட்டமிட்ட ரீதியில் தாக்குதல் நடத்தியுள்ளார்கள் : ஜாதியைச் சொல்லி கோஷங்கள் எழுப்பியுள்ளார்கள். உளவுத்துறை இது குறித்து முன்னதாகவே தெரிந்திருந்தும் தடுக்க முனையவில்லை என்பதிலிருந்தும் இந்தச் சம்பவத்துக்கு தமிழக அரசின் பின்னணி இருக்குமோ என சந்தேகிக்கிறேன். இந்தச் சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தாயக பணியில்,

**(இல.கணேசன்)**